# மாம்சத்துக்குரிய விசுவாசிகளும், ஆவிக்குரிய விசுவாசிகளும்.
## ( தேவனுடைய வார்த்தையால் வாழ்பவர்களும், தங்களது உணர்ச்சிகளால் வாழ்பவர்களும். உணர்ச்சிப்பூர்வமான விசுவாசிகளும், ஆவிக்குரிய விசுவாசிகளும். ஆத்தும விசுவாசிகளும், ஆவிக்குரிய விசுவாசிகளும் )

*1கொரி 3:1 மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று.*

இந்த வார்த்தைகளை பவுல் கொரிந்துவில் உள்ள விசுவாசிகளுக்கு எழுதுகிறார். இந்த சபை பவுலினால் ஏறத்தாழ கி.பி.52 ல் தொடங்கப்பட்டது ***(அப் 18).***

*1கொரி 1:2 கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது:*

இவ்வசனத்தின்படி இரண்டு விதமான விசுவாசிகள் இருக்கின்றனர்.

**1. ஆவிக்குரிய விசுவாசி.** இவர் பரிசுத்த ஆவியை உடையவர், பரிசுத்த ஆவியால் முழுமையாக ஆளுகை செய்யப்படுகிறவர்.

இவர் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு, பரிசுத்த ஆவியால் ஆளுகை செய்யப்படுகிறவர். தன்னுடைய சுய, மனித சக்தியால் ஆளுகை செய்யப்படுகிறவர் அல்ல. ***( 1 கொரி 2:15 )***

இவர் தன்னுடைய மாம்சத்தை விட பரிசுத்த ஆவிக்கு அதிகமாக கட்டுப்பட்டவர்.

இவர் தன்னுடைய சுய திறமைகளை சார்ந்திருக்காமல் தேவனுடைய திறமைகள் மேல் சார்ந்திருப்பவர்.

இவர் தன்னுடைய உணர்ச்சிகளின் ஆதிக்கத்துக்குட்படாமல், தேவனுடைய வார்த்தையின் ஆதிக்கத்துக்குட்பட்டவர் ***( ரோமர் 8:6 )***

இவர் ஆவிக்குரிய சத்தியங்களை ஏற்றுக்கொள்பவர். ***( 1 கொரி 2:14-16 ).***

*1தெச 5:23 சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.*

**2. மாம்சத்துக்குரிய விசுவாசி.** ( மாம்சப்பிரகாரமான விசுவாசி, உலகப்பிரகாரமான விசுவாசி, ஆவிக்குரிய ரீதியில் முதிர்ச்சி அடையாத விசுவாசி, கிறிஸ்துவுக்குள் குழந்தைகள் ). **மாம்சம்.** அகராதி அர்த்தம்: சரீரத்தின் பசிகளாலும், தீவிர உணர்ச்சிகளாலும் நிறைந்திருக்கிறவர். சரீரப்பிரகாரமான அல்லது மாம்சப்பிரகாரமான.

கிரேக்க வார்த்தை. **"சார்க்ஸ்"** இதன் அர்த்தம் **அ.** மாம்சத்தின் சுபாவம் உடைய. அதாவது, ஐம்புலன்களால் மாத்திரம் நடத்தப்படுகிற, மிருகப்பசிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிற, பரிசுத்த ஆவியின் ஆளுகைக்குட்படாமல் மனித சுபாவத்தின் ஆளுகைக்குட்பட்டிருக்கிற.

**ஆ.** சரீரப்பிரகாரமான ( உடல் சம்பந்தமான ). ***ரோமர் 15:27; 1 கொரி 9:11.***

*ரோம 7:18 அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மைவாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை.* வேதாகமத்தில் மாம்சம் என்னும் வார்த்தை **"மறுபடியும் பிறக்காத, உயிர்ப்பிக்கப்படாத ஒரு மனிதனுடைய முழு சுபாவத்தையும் வாழ்க்கையையும், அவரது ஆவி, ஆத்துமா, சரீரத்துக்குரிய அனைத்து காரியங்களையும் சேர்த்து குறிக்கிறது ".** ***மாம்சம்;*** *யோவா 3:6 மாமிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.*

**மாம்சத்துக்குரிய விசுவாசி:** தேவனுடைய ஜீவனைப் பெற்றும், மறுபடியும் பிறந்தும், மாம்சத்தை மேற்கொள்ள முடியாமல், மாம்சத்தால் மேற்கொள்ளப்பட்டு வாழுகிற விசுவாசி.

இவர் தன்னுடைய வாழ்க்கையை ( நல்ல முறையிலோ, கெட்ட முறையிலோ ) தன்னுடைய சுய திறமையினால் வாழுகிறவர் ***( ரோமர் 8:7 )***

இவர் தன்னுடைய ஐம்புலன்களின் ஆதிக்கத்தில் இருக்கிறவர். பார்ப்பது, சுவைப்பது, கேட்பது, நுகர்வது, உணர்வது இவைகளின் ஆதிக்கத்தில் இருக்கிறவர்.

இவர் தான் பாவம் செய்வதற்கும், நடந்து கொள்வதற்கும், மற்ற எதையும் செய்வதற்கும், தன்னுடைய ஆத்துமா, சரீரத்தின் படி மாத்திரம் செய்கிறவர்.

இவரால் ஆவிக்குரிய சத்தியங்களை ஏற்றுக்கொள்ள முடிகிறதில்லை. ***( 1 கொரி 2:14-16; 1 கொரி 3:2 ).***

இவர் சண்டைக்காரராகவும், பொறாமையும், பேதகமும் உள்ளவராகவும், அவ்விசுவாசிகளைப்போலவும் இருக்கிறவர் ***( 1 கொரி 3:3-4 ).***

இவர் நீண்ட காலமாக ஒரு குழந்தையாகவே இருக்கிறவர் ***( எபி 5:11-14 ).*** குழந்தையாக இருப்பதற்கு வேதாகமம் அனுமதித்திருக்கிற சமயம் சில வருடங்கள் மாத்திரமே.

**ஒரு பாவியின் மாம்சமும் ஒரு பரிசுத்தவானின் மாம்சமும் ஒரே மாதிரியானவையே.**
ஒரு மனிதன் மறுபடியும் பிறக்கும்போது, தேவன் அவருக்கு தன்னுடைய சிருஷ்டிக்கப்படாத ஜீவனை கொடுக்கிறார். தேவன், இந்த ஜீவனை உபயோகித்து மாம்சத்துக்கு கற்றுக்கொடுப்பதோ அல்லது பயிற்சி கொடுப்பதோ இல்லை. மாறாக அவர் கொடுத்த ஜீவனை உபயோகித்து ஒரு விசுவாசி தன் மாம்சத்தை மேற்கொள்ளும்படியாக உபயோகிக்கிறார். ஒருவர் மறுபடியும் பிறப்பதே ஆவிக்குரிய வாழ்க்கையின் தொடக்கமாகும்.

*ரோம 7:14 மேலும், நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது, நானோ பாவத்துக்குக் கீழாகவிற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன்.*
*ரோம 7:17 ஆதலால் நான் அல்ல எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது.*
*ரோம 7:18 அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மைவாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை.*

மேற்கண்ட இந்த வசனங்களில் இருந்து, மாம்சத்துக்கு இரண்டு மூலப்பொருள்கள் இருக்கின்றன என அறிந்து கொள்ளலாம். அவை **1. பாவம் 2. நான் ( சுயம் )**

## தேவன் பாவத்துக்கு என்ன செய்தார் ?

நம்முடைய பழைய மனிதன் ஏற்கனவே இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டு விட்டான் ***( ரோமர் 6:6 ).***
*ரோம 8:3 அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.*
இயேசு கிறிஸ்து மரித்த போது, மனிதர்களுக்காக அவர்களது தண்டனையை ஏற்று, பாவத்துக்கான பலியாக மரித்தார். அதோடு கூட பாவத்தையும் தண்டனைக்குள்ளாக்கினார். இயேசுவின் மரணத்தின் போது அவரது மாம்சத்தில் பாவம் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டது. அப்போது அவரது மரணத்தில் இணைக்கப்பட்டவர்களின் மாம்சத்திலும் பாவம் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டது. இயேசுவின் மரணத்தில் இணைக்கப்பட்ட ஒருவரை இனிமேல் தாக்குவதற்கான வல்லமை பாவத்துக்கு இப்போது இல்லை. இந்த சம்பவத்தை இப்போது நாம் உண்மை என்று எண்ண வேண்டும் ***( ரோமர் 6:11 ).*** அப்போதுதான் நம்மால், இயேசுவின் மரணத்தின் உபயோகத்தை பெற்றுக்கொண்டு **'பாவப்பிரமாணத்தில்'** இருந்து முற்றிலுமாக விடுவிக்கப்பட முடியும். ( **பாவப்பிரமாணம்;** பழைய மனிதன் விட்டுச்சென்ற, புதிதாக்கப்படாத மனமும் உணர்ச்சிகளும். எஞ்சி இருக்கின்ற "பழைய மனிதன் அல்லது பாவத்தின் விளைவுகள்"). இவற்றில் இருந்து, தேவன் நம்முடைய பாவங்களை முழுமையாக சிலுவையில் சரிக்கட்டி இருக்கிறார் என்று நாம் அறிந்து கொள்ளலாம். நாம் நம்முடைய பாவங்களுக்காக இனியும் சிலுவையில் அறையப்பட வேண்டியதில்லை.

என்றாலும் வேதாகமம் பல இடங்களிலும் ***( மத் 10:38, 16:24. மாற்கு 8:34 )*** "தன் சிலுவையை எடுத்துக்கொண்டு அநுதினமும் என்னை பின்பற்ற வேண்டும்" சொல்லுகிறது.
*லூக் 9:23 பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.*

இப்போது கலாத்தியர் ***5:24*** ல் வேதாகமம் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம் *"கலா 5:24 கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்."* இவ்வசனம் சொல்லுகிறது, இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட அன்று, ஒரு விசுவாசியின் மாம்சம் ஏற்கனவே சிலுவையில் அறையப்பட்டு விட்டது. அப்படியானால் இப்போது எப்படி மாம்சம் உயிரோடு இருக்க முடியும் ? ஒரு விசுவாசியின் மாம்சம், இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டு விட்டது என்றால், மாம்சத்தின் மூலப்பொருள்களான **பாவமும், நானும் (சுயமும்)** ஏற்கனவே மரித்து அழிந்து போயிருக்க வேண்டும், அப்படித்தானே ? பின்னே ஏன் ஒரு விசுவாசி **தன் சிலுவையை எடுத்துக்கொண்டு** அநுதினமும் இயேசுவை பின்பற்ற வேண்டும் ?

இதன் பதிலை பார்க்கு முன்பு, வேதாகமத்தில் ***கலாத்தியர் 5:16-17*** வசனங்களை பார்ப்போம். *"கலா 5:16 பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.*
*கலா 5:17 மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது."*
இங்கே வேதாகமம் சொல்லுகிறது, ஒரு மறுபடியும் பிறந்த விசுவாசியிடம் இன்னனும் மாமிசம் இருக்கிறது. மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசியிடம் பரிசுத்த ஆவி இருக்கிறது, அவர் தேவனுடைய பிள்ளை, இயேசு கிறிஸ்துவினுடையவர். அவரிடம் இருக்கிற மாம்சம், ஆவிக்கு விரோதமாக இச்சிக்கும் அளவுக்கு வல்லமை

உடையதாக இருக்கிறது. அப்படியானால் ***கலா 5:16,17 ம், கலா 5:24*** ம் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறதா ? **இல்லவே இல்லை.**

**மாம்சத்துக்கு உண்மையில் இரண்டு விதமான பகுதிகள் இருக்கின்றன. 1. பாவப்பகுதி 1. சுயப்பகுதி. இயேசுவின் சிலுவை மாம்சத்தின் பாவப்பகுதியை சரிக்கட்டுகிறது. பரிசுத்த ஆவியானவர் சிலுவையின் மூலமாக மாம்சத்தின் சுயப்பகுதியை சரிக்கட்டுகிறார்.**

இயேசு கிறிஸ்து, தன் சிலுவையின் மூலமாக, விசுவாசிகளை பாவப்பிரமாணத்திலிருந்து முற்றிலுமாக விடுவித்திருக்கிறார். இதனால் **பாவத்துக்கு** இனிமேல் விசுவாசியின் மேல் ஆதிக்கம் செலுத்த முடியாது. இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் மூலமாக விசுவாசிகளுக்குள் வாழ்ந்து, அவர்கள் தங்களது **சுயத்தின்** மேல் ஆதிக்கம் செலுத்தி முற்றிலுமாக அவருக்கு கீழ்ப்படியும்படியாக செய்கிறார். பாவத்தில் இருந்து விடுவிக்கப்படும் காரியம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டாகி விட்டது, என்றாலும், ஒரு விசுவாசி தன்னுடைய சுயத்தை வெறுக்க வேண்டிய காரியம் அநுதினமும் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது.

இயேசு மரிப்பதற்கான வாய்ப்பை கொடுத்தது அவரது சிலுவை. நம்முடைய வாழ்விலும், இயேசுவின் சிலுவையை போன்று, **நம்மை** மரிக்க வைப்பதற்கான வாய்ப்பை தருகிற சூழ்நிலைகள் உண்டு. உதாரணத்துக்கு, கிறிஸ்து இயேசுக்காக பாடுகள், துன்பங்கள் ***( 2 தீமோ 3:12 ),*** மாம்சத்துக்கும், நம் மறுபடியும் பிறந்த ஆவிக்கும் இடையில் நடக்கிற தொடர் போராட்டங்கள் ***( கலா 5:17*** ) போன்றவை. வறுமை, நோய், பிரச்சினைகள் போன்றவை நாம் சுமக்க வேண்டிய சிலுவை அல்ல, இவைகளை நம் இயேசு சுமந்து, அவற்றுக்கான பிராயச்சித்தத்தையும் ஏற்கனவே செய்திருக்கிறார் ***( மத் 8:17 ).*** நாம் அநுதினமும் சுமக்க வேண்டிய சிலுவை என்பது " **அன்றாடம் நாம் சந்திக்கும் அனைத்து சூழ்நிலைகளிலும், தேவனுடைய வார்த்தைகளை ( தேவனுடைய சித்தம்) எடுத்து அவற்றை நம் சித்தத்துக்கும் மேலாக உயர்த்துவதே".**
நாம் **அநுதினமும்** சிலுவையை சுமக்க வேண்டும் என்பது மிக முக்கியமானதாகும். தொடர்ந்து இதை செய்வது மாம்சத்தை கீழ்ப்படுத்துவதற்கான ஒரு முக்கியமான காரியம் ஆகும். இடையிடையே தேவனை தேடுவது என்பது வளர்ச்சிக்கு உகந்தது அல்ல. இயேசுவில் தொடர்ந்து நிலைத்திருப்பவர்களுக்கே ஜெயம் நிச்சயம் ***( சங் 91:1; யோவான் 8:31. 15:4-7 )***
*1பேது 2:11 பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்சஇச்சைகளை விட்டு விலகி,*

### குழந்தை விசுவாசி;
மறுபடியும் பிறந்த ஒரு புதிய விசுவாசி, இயேசுக்குள் ஒரு குழந்தையாக இருக்கிறார். அவர்களில் பலரும் மாம்சபிரகாரமாகவே இருக்கிறார்கள். ஆனாலும் அவர் அப்படியே தொடர்ந்து இருக்க வேண்டும் என்பது இல்லை. அவர் சீக்கிரமாக வளர்ந்து ஆவிக்குரிய விசுவாசியாக ஆக வேண்டும் ***( 1 கொரி 3 ).***
**மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசி குழந்தையாகவே இருந்து, ஆவிக்குரிய முதிர்ச்சிக்குள் வளராமல் இருப்பதற்கான இரண்டு காரணங்கள்.**
1. அவர்களை ஆவிக்குரிய வாழ்க்கையில் நடத்துபவர்கள் வெளிப்படையான காரியங்களுக்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுத்து, அவர்களை ஆவிக்குரிய விதமாக வளருவதற்கு ஊக்கப்படுத்தாமல் இருப்பது.
2. விசுவாசிகள் ஆவிக்குரிய விதத்தில் வளருவதற்கு, ஆவிக்குரிய காரியங்களை நாடுவதற்கு, அதற்கான விலையை கொடுப்பதற்கு மனமில்லாமல் இருப்பது.

## பாவத்திலிருந்து விடுதலை.
*ரோம 6:6 நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.*
**பாவம்.** நம்மை பாவம் செய்ய தூண்டுகிற சக்தி.

**பழைய மனிதன்**. ஆதாமிடம் இருந்து நாம் பெற்றுக்கொண்ட ஆத்தும பகுதி.

**பாவ சரீரம்.** ஆதாமிடம் இருந்து நாம் பெற்றுக்கொண்ட சரீர பகுதி.

இவ்வசனத்தின் விளக்கம் என்ன வென்றால், " நம்முடைய மீண்டும் உயிர்ப்பிக்கப்படாத பழைய சுயம், இயேசுவோடு கூட சிலுவையில் அறையப்பட்டு விட்டது. இது எதற்காக என்றால், இதற்கு முன்பாக பாவ சுபாவத்தால் ஆளப்பட்டிருந்த நம்முடைய மாம்சபிரகாரமான சரீரம், பாவ சுபாவத்தினால் மீண்டும் ஆளப்படாதவாறு செயலற்றுப்போகுமாறு ஆகுவதற்கு. இதன் முடிவு என்னவென்றால், ஒரு அடிமையைப்போல நாம் பாவ சுபாவத்துக்கு நம்மை விட்டுக்கொடுக்க வேண்டியதில்லை."
நாம் இனிமேல், பாவத்தால் ஒடுக்கப்பட்டவர்களாக, பாவப்பிரமாணத்தினால் கட்டப்பட்டவர்களாக ஜீவிக்க வேண்டிய அவசியம் இல்லை. பாவம் இனிமேல் நம்மை ஆள முடியாது.

### இந்த ஆசீர்வாதத்தை அனுபவிப்பது எப்படி ?

**1. எண்ணிக்கொள்ளுங்கள். ( கணக்கில் எடுத்துக்கொள்ளுங்கள்).** *ரோம 6:11 அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்.*

நாம் எப்படி மரித்தோம் ? பாவத்துக்கு மரித்தவர்களாக கணக்கில் எடுத்துக்கொள்ளுங்கள்.

நாம் எப்படி ஜீவிக்கிறோம் ? தேவனுக்கென்று ஜீவிக்கிறவர்களாக கணக்கில் எடுத்துக்கொள்ளுங்கள்.

எண்ணிக்கொள்ளுங்கள் (கணக்கில் எடுத்துக்கொள்ளுங்கள்). இந்த வார்த்தையின் அர்த்தம் **"தேவனுடைய வார்த்தையின் படி அவரை விசுவாசிப்பது".**

தேவனுடைய வார்த்தையை முழுவதுமாக விசுவாசித்து, அவர் செய்திருப்பது எல்லாம் உண்மையே என்று நாம் கணக்கில் எடுத்துக்கொள்ளும்போது, அவரது பரிசுத்த ஆவியாவனவர் இந்த அனுபவத்தை நமக்கு தருவார்.

**2. தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.** *ரோம 6:13 நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.*

இதுவே அர்ப்பணிப்பு. நாம் தோற்றுப்போகிறோம் என்றால் இரண்டு காரணங்களினால் மாத்திரமே. 1. நம் விசுவாசத்தில் தோற்றுப்போகிறோம். 2. நம் கீழ்ப்படியாமையில் தோற்றுப்போகிறோம்.

ஒரு விசுவாசியின் மனோபாவம் எப்படி இருக்க வேண்டுமென்றால், " தேவன் என்னிடம் என்ன கேட்டாலும், அது எவ்வளவுதான் கடினமாக இருந்தாலும், எவ்வளவுதான் மாம்சத்துக்கு எதிராக இருந்தாலும், அதை கொடுப்பதற்கு என் இதயம் எப்போதும் தயாராக இருக்கிறது. அநுதினமும், ஒரு கீழ்ப்படிதலுள்ள மகனாக இருப்பதற்கு நான் கற்றுக்கொள்வேன்".

இப்படி தொடர்ந்து வாழுங்கள், பின் ***ரோமர் 14*** உங்கள் அனுபவமாக இருக்கும் " நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், *பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது."*

பாவம் இன்னும் இருக்கின்ற போதிலும், உங்கள் சரீரத்தின் மேல் அதன் வல்லமை முறியடிக்கப்பட்டிருக்கிறது. இப்போது பாவம் சரீரத்தை நேரடியாக உபயோகிக்க முடியாது. நம் சரீரம் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறது. நாம் நம் முழு சரீர மீட்புக்காக இனி காத்திருந்தால் போதும்.

## தேவன் எவ்வாறு மாம்சத்தின் சுயப்பகுதியை சரிக்கட்டுகிறார் ?

இதுவரையிலும் நாம் படித்தவற்றில் இருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டும், " நம்முடைய மறுபடியும் பிறத்தலில், நம்முடைய இயற்கையான வாழ்க்கைக்கு - ஆத்தும வாழ்க்கைக்கு, ( ஆத்துமா மூலமாக நாம் வாழுகிற வாழ்க்கைக்கு ) ஒன்றும் செய்யப்பட வில்லை. மாம்சத்தின் இந்த சுய (ஆத்துமா) பகுதிக்கு என்ன செய்யப்பட வேண்டும் என்று இப்போது பார்ப்போம்.

**ஆத்துமா:** மனிதனுடைய "தனிமனித சிறப்பு, ஆளத்துவம்". இதுதான் உண்மையான "நான்". "சுயம்". இதனால்தான் ஒரு மனிதனை வேதாகமம் "ஆத்துமா" என்று பல இடங்களிலும் அழைக்கிறது ( லேவி 18:29, ஆங்கில வேதாகமத்தில் 'souls' என்று பல இடங்களிலும் ). ஆத்துமாவுக்கான கிரேக்க மூல வார்த்தை **"ப்ஸுகே"** என்பதாகும். இதன் அர்த்தம் 'விலங்கின வாழ்க்கை'. ஆத்தும வாழ்க்கையே ஒரு மனிதனை வாழும் சிருஷ்டியாக ஆக்குகிறது. இந்த ஆத்தும வாழ்க்கை இயற்கைக்குரியது. இது "மனித வாழ்க்கை" இது விலங்கின வாழ்க்கை. ***( மத் 2:20, 6:25, மாற்கு 10:45, லூக்கா 12:22, அப் 20:10, லூக்கா 9:24 )***

நம்முடைய மறுபடியும் பிறத்தலில், பரிசுத்த ஆவியானவர் நம்முள்ளில் கொடுக்கின்ற வாழ்வு (ஜீவன்), தேவனுடைய சிருஷ்டிக்கப்படாத ஜீவன். இதன் கிரேக்க மூல வார்த்தை **"ட்சோவே"** என்பதாகும். ***( யோவான் 3:15, 5:26, அப் 3:15, கொலோ 3:4, 1 யோவான் 1:2 ).***

ஆத்துமாவுக்கு, ஆத்தும வாழ்க்கைக்கு மூன்று பகுதிகள் இருக்கின்றன. **1. சித்தம் 2. மனம் 3. உணர்ச்சிகள்.** ஒரு விசுவாசி தன்னுடைய ஆத்தும வாழ்க்கையில் மாத்திரம் வாழும்போது, சிலர் தங்களது சித்தப்படியும், சிலர் தங்களது மனதின் படியும், சிலர் தங்களது உணர்ச்சிகளின் படியும் வாழுகின்றனர். சில சயயங்களில் ஒரு பகுதியின் படியும், சில சமயங்களில் மற்றொரு பகுதியின் படியும் வாழுவதும் உண்டு.

ஒரு விசுவாசியிடம் இப்போது இரண்டு **வாழ்க்கை** அல்லது **ஜீவன்கள்** இருக்கின்றன **1. ஆவியின் ஜீவன் (வாழ்க்கை) 2. ஆத்துமாவின் ஜீவன் ( வாழ்க்கை ).**

இந்த கால கட்டத்தில், ஒரு விசுவாசி வேதாகமத்தின் உண்மைகளை அறிந்து, பாவம் அவரது காலின் கீழ்ப்பட்டு இருக்கிற ஒரு நிலைக்குள் பிரவேசிக்கிறார். உலக ஆசைகளும், சிற்றின்பங்களும், மாம்சத்தின் இச்சைகளும் அவரை இப்போது இழுப்பது இல்லை. இப்போது, இந்த நிலையில், அவர் தான் முற்றிலுமாக ஒரு **ஆவிக்குரிய வாழ்க்கை** வாழுவதாக மெய்யாகவே நம்பிக்கொண்டிருப்பார். அவர் வாழ்க்கையில் திரும்பி பார்த்து, அவரோடு புறப்பட்ட பல விசுவாசிகளும் இன்னும் பாவத்தில் ஜீவித்துக்கொண்டிப்பதை பார்ப்பார். அவர்களோடு ஒப்பிடும்போது தான் ஒரு நல்ல உயர்ந்த ஆவிக்குரிய நிலையில் இருப்பதாக எண்ணிக்கொள்வார். உண்மையில்

அவர் நினைப்பதற்கும் முற்றிலும் மாறுபட்ட ஒரு நிலையில் அவர் இருக்கிறார். இந்த நிலையிலும் அவர் ஒரு **"ஆத்துமாவுக்குரிய விசுவாசியாகவே"** இருக்கிறார். ஏன் இந்த நிலமை ? ஏனென்றால், விசுவாசியின் **"பாவ சுபாவத்தை"** இயேசுவின் சிலுவை சரிக்கட்டியிருந்த போதிலும், விசுவாசியின் **"ஆத்தும வாழ்க்கை"** இன்னும் அப்படியே இருக்கிறது.

பழைய மனிதன் இப்போது விசுவாசியின் ஆத்துமாவை இயக்காமல் இருக்கின்ற போதிலும், அவரது ஆத்துமாவே இன்னும் அவரது வாழ்க்கையின் சக்தியாக இருக்கிறது. பாவ சுபாவம் அவரிடம் இருந்து எடுக்கப்பட்டு இப்போது தேவனுடைய சுபாவம் இருப்பதனால், அதன் விளைவாக அவரது ஆசைகள், மன விருப்பங்கள், எண்ணங்கள்,சிந்தனைகள் அனைத்தும் நல்லவைகளாக இருக்கின்றது. முன்பு போல கெட்டவைகளாக இல்லை. **ஆனாலும் அவர் தன்னுடைய எண்ணங்கள், ஆசைகள், மன விருப்பங்கள், சிந்தனைகள் போன்ற அனைத்தையும் தன்னுடைய ஆத்துமா மூலமாகவே தொடர்ந்து செயல் படுத்திக்கொண்டு இருக்கிறார்.**

ஆத்துமாவையே நம்பியிருக்கிற ஒரு மனிதன், ஆவிக்குரிய காரியங்களை நிறைவேற்றுவதற்காக, தன் ஆத்தும பலத்தையே நம்பக்கூடும். அதாவது தேவன் கேட்பதை சுயத்தின் பலம் மூலமாக நிறைவேற்றுவது. **ஆத்தும வாழ்க்கை** என்பதுதான் **சுய வாழ்க்கை.** பலருக்கும் **பாவத்துக்கும், சுயத்துக்கும்** உள்ள வேறுபாடு தெரியாது. பலரும் இவ்விரண்டையும் ஒன்று என்றே நினைத்துக்கொண்டிருக்கின்றனர். வேதாகமத்தின்படியும் ஆவிக்குரிய அனுபவங்களின் படியும் இவ்விரண்டும் வெவ்வேறானதாகும். பாவம் அருவருப்பானது, தேவனுக்கு எதிரானது, மோசமானது. ஆனால் சுயம் அப்படி அல்ல. அது எப்போதும் அருவருப்பாகவும், தேவனுக்கு எதிரானதாகவும், மோசமானதாகவும் இருக்க வேண்டும் என்பது இல்லை. மாறாக பல சமயங்களிலும் சுயம் மதிக்கத்தக்கதாகவும், தேவனுக்கு உதவ விரும்புவதாகவும், நல்லதாகவும் இருக்கும். உதாரணத்துக்கு, வேதாகமத்தை படிப்பது ஒரு மிக நல்ல காரியம். வேதாகமத்தை படிப்பது பாவமானதும் அல்ல. ஆனாலும் பல சமயங்களிலும், நாம் வேதாகமத்தை படிக்கும்போது, நம்முடைய சொந்த திறமையினால் படிக்கலாம். நம் சொந்த திறமையினால் வேதாகமத்தை படிப்பது பாவமான காரியம் அல்ல என்றாலும், அப்படி செய்வது சுயத்தின் வேலையே.

ஆகவே, ஆவிக்குரிய விசுவாசி என்பவர், தன்னுடைய ஆவியில், பரிசுத்த ஆவியை செயல்படும்படியாக விடுகிறவர். அவர் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியானவர் தன்னுடைய ஆவியில் வாசமாயிருக்க அனுமதித்து, பரிசுத்த ஆவியானவர் தருகிற **"ஜீவனை"** பெற்றுக்கொண்டு, அந்த ஜீவன் - அவருக்கு அன்றாடம் வாழ்க்கையில் அனைத்து காரியங்களுக்கும் தேவையான - பெலனை கொடுக்குமாறு அனுமதித்து வாழ்க்கையை நடத்துகிறவர். பரிசுத்த ஆவியானவரின் பெலன் மூலமாக வாழ்வதன் மூலம், அவர் இந்த பூமியில் தன்னுடைய சித்தத்தை நிறைவேற்றாமல் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி வாழுகிறார். வாழ்க்கையின் எந்த காரியத்திலும், அல்லது தேவனுக்கு ஊழியம் செய்வதிலும், அவர் தன்னுடைய சுய புத்தியின் மேல் சாராமல் இருக்கிறார். அவருடைய முழு வாழ்க்கையும் அவரது உணர்ச்சிகளால் கட்டுப்படுத்தப்படுவதில்லை, வழிநடத்தப்படுவதில்லை, மாறாக அவரது வாழ்க்கை அமைதியாக ஆவியில் வாழுகிற வாழ்க்கையாக இருக்கிறது.

ஆத்தும விசுவாசி இதற்கு நேர் எதிர் மறையானவர். அவருடைய ஆவியில் தேவனுடைய ஜீவன் இருக்கின்ற போதிலும், அவர் தன்னுடைய வாழ்க்கைக்கு தேவையானவற்றை தேவனுடைய ஜீவனில் இருந்து பெற்றுக்கொள்கிறதில்லை. தன்னுடைய அன்றாட வாழ்க்கையில், தன்னுடைய ஆத்தும வாழ்க்கையையே பிரதானமாக்கி, தன் சுயத்தில் இருந்தே தன் வாழ்க்கைக்கு தேவையான எல்லாவற்றையும் பெற்றுக்கொள்கிறார். தன் சொந்த விருப்பங்களுக்கே முதலிடம் கொடுத்து, இருதயத்தின் ஆழத்தில் இருந்து தேவனுக்கு கீழ்ப்படிவதை கற்றுக்கொள்ளாமல் இருக்கிறார். தேவனுக்கு அவர் செய்யும் ஊழியத்தில் கூட, தன்னுடைய சுய புத்தியை உபயோகித்து பல நல்ல காரியங்களை செய்ய முயற்சிக்கிறார். தன்னுடைய உணர்ச்சிகளால் ஆட்டுவிக்கப்படுகிறார், நடத்தப்படுகிறார்.

## ஆத்தும விசுவாசிகளின் சில குணாதிசயங்கள். ஆத்தும விசுவாசிகளின் வாழ்க்கை.

ஆத்தும விசுவாசிகளின் குணாதிசயங்கள், எல்லோருக்கும் ஒரே மாதிரியாகவே இருக்க வேண்டும் என்பது இல்லை, ஏனென்றால் ஒவ்வொருவரும் மற்றவரிடம் இருந்து வேறு பட்டவர். ஒவ்வொருவருக்கும் தனிச்சிறப்பு இருக்கிறது. ஆயினும், ஒரு மனிதர் இயேசுவை விசுவாசித்து அவர் மறுபடியும் பிறக்கும்போது, அவரது ஆளத்துவம் தனிச்சிறப்பு முழுமையாக அழிக்கப்படுவது இல்லை. ஆகவேதான் விசுவாசிகளுடைய ஆத்தும வாழ்க்கை ஒருவருக்கொருவர் வேறுபடுகிறது. ஆகவே ஆத்தும விசுவாசிகளின் குணாதிசயங்களை குறிப்பிடும்போது நாம் பொதுவாகவே குறிப்பிட முடியும். விசுவாசிகள் தங்களுடைய சொந்த வாழ்க்கை அனுபவங்களை இவற்றுடன் ஒப்பிட்டு பார்த்துக்கொள்ளலாம். ஆத்தும வாழ்க்கையின் செயல் பாடுகளை, நாம் நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம். 1. **தங்கள் சொந்த திறமைகளை உபயோகிப்பது. 2. வீண் பிடிவாதம், அடங்காத்தனம், தேவனுக்கு கீழ்ப்படியாமை. 3. ஞானவான்களை போல பாசாங்கு செய்வது, பலவிதமான அபிப்ராயங்களையும் திட்டங்களையும் கொண்டிருப்பது. 4. ஆவிக்குரிய அனுபவங்களை உணர்ச்சிகளின் மூலம் நாடுவது.**

தங்களது சொந்த அனுபவங்களை வைத்து பார்க்கும்போது, ஒருவகையில், பல விசுவாசிகளும் - சரீரத்தின் ஆளுகைக்குட்பட்டு பாவம் செய்கிறார்கள், மற்றொருவகையில்
தங்களது ஆத்துமாவின் ஆளுகைக்குட்பட்டு தாங்களாகவே வாழுகிறார்கள். வேதாகமத்தின் அடிப்படையில் பார்க்கும்போது இந்த இரண்டுமே "மாம்சத்தின் வெளிப்பாடுகளே". சில சமயங்களில் விசுவாசிகள் பாவம் செய்கிறார்கள், மற்ற சமயங்களில் அவர்களின் ஆத்துமாவின் படி நடக்கிறார்கள். சில சமயங்களில் அவர்கள் சரீரத்தின்படி நடக்கிறார்கள், மற்ற சமயங்களில் ஆத்துமாவின்படி நடக்கிறார்கள். இந்த இரண்டுமே ஆவிக்குரியவைகளோ, தேவனுக்கு பிரியமானவைகளோ அல்ல.

## ஆத்தும வாழ்க்கையின் அபாயங்கள்.

### 1. ஆவியை அவித்துப்போடும் அபாயம்.

*கலா 5:16 பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்படி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.*
*1தெச 5:19 ஆவியை அவித்துப்போடாதிருங்கள்.*

### 2. மீண்டும் சரீரத்தின் ஆளுகைக்குள் செல்லும் அபாயம்.

*கலா 5:19 மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், 20 விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், 21 பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.*
இவ்வசனங்களில் மாம்சத்தின் கிரியைகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்ற பலதும் ஆத்மாவுக்கு உட்பட்டு செய்கிற பாவங்களே. பாவத்தில் இருந்து விடுபட்டிருக்கிற ஒரு விசுவாசி தொடர்ந்து முன்னேறி சென்று தன்னுடைய சுய, ஆத்தும வாழ்க்கையை மேற்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி கற்றுக்கொள்ளாமல் தொடர்ந்து ஆத்துமாவின் ஆளுகைக்குட்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு விசுவாசி, மீண்டும் பின்னேறி சென்று, அவர் விடுவிக்கப்பட்டதில் மீண்டும் அகப்பட்டுக்கொள்ள நேரிடும். அதாவது மீண்டும் ஆத்துமாவும் சரீரமும் இணைந்து அவர் விட்ட பாவங்களையே மீண்டும் செய்ய வாய்ப்பு ஏற்படும்.

### 3. இருளின் வல்லமையினால் உபயோகப்படுத்தப்படும் அபாயம்.

*யாக் 3:14 உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்சொல்லாமலுமிருங்கள். 15 இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது.*
யாக்கோபு எழுதின நிருபம், விசுவாசிகளுக்கு எழுதப்பட்டது. இங்கே இருதயத்தில் வருகிற ஒரு ஞானம் பேய்த்தனத்துக்கடுத்ததாயிருக்கிறது என்று வேதாகமம் சொல்லுகிறது. அதாவது ஆத்துமா, சாத்தானால் உபயோகப்படுத்தப்படும் அபாயம்.

## சிலுவையும் ஆத்துமாவும்.

### சிலுவையும் ஆத்துமாவின் பாசங்களும்.

*மத் 10:37 தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல.*
*38 தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.*
*39 தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்.*
*லூக் 14:26 யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.*

ஊர் என்கிற கல்தேயருடைய பட்டிணத்தை விட்டு செல்வதற்கு விசுவாசிகள் தயாராக இருகிறார்கள், ஆனால் தேவன் கொடுத்ததை மோரியா மலையின் மேல் அவருக்கு பலியிட பல விசுவாசிகளும் தயாராக இருப்பதில்லை. **( ஆதி 11:31, 12:1, 22:1,2 ).** இது விசுவாசத்தின் ஒரு ஆழமான பாடம். இது தேவனுடைய ஜீவனுக்குக்குள் நுழைந்து அவரோடு இணைந்து வாழுகிற வாழ்க்கை. தேவனுடைய பிள்ளைகள் எல்லாவற்றையும் விட்டு விட்டு அவரது சொந்தமாக இருக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார். தங்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்று கருதப்படுகிற மோசமானவைகளை மாத்திரம் அவர்கள் விட்டால் போதாது. தாங்கள் உலகில் மிகவும் முக்கியமானது என கருதும் பாசம், நேசம் போன்றவற்றையும் சிலுவையில் விட்டு விட்டு பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின் படி நடக்க வேண்டும்.

### சிலுவையும் சுயமும்.

மத் 16:24 *அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.*

*25 தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்.*

இங்கே ஜீவன் என்ற வார்த்தையின் மூல கிரேக்க வார்த்தை "ப்ஸூகே" என்பதாகும். இதன் அர்த்தம் ' ஆத்தும வாழ்வு ' ' soul life '.

**சிலுவையும், ஆத்துமாவின் உலகப்பற்றும்.**

*லூக் 17:32 லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்.*
*33 தன் ஜீவனை இரட்சிக்க வகைதேடுகிறவன் அதை இழந்துபோவான்; இழந்துபோகிறவன் அதை உயிர்ப்பித்துக்கொள்ளுவான்.*

**சிலுவையும் ஆத்துமாவின் வல்லமையும்.**

*யோவா 12:24 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்.*
*25 தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்.*

ஜீவன்: ஆத்தும வாழ்வு.

## இதை எப்படி நடைமுறையில் செய்வது.

1. ஆவியும் ஆத்துமாவும் பிரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை தெரிந்து கொள்ள வேண்டும். ***( எபி 4:12 ).***

2. பிரிக்கப்பட விரும்ப வேண்டும்.

3. முழுவதுமாக ஒப்புக்கொடுக்க வேண்டும்.

4. ***ரோமர் 6:11*** ல் நிலைத்து நிற்க வேண்டும்.

*5. தேவனுடைய வார்த்தையை தியானித்து ஜெபிக்க வேண்டும். 1பேது 1:22 ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்;*

6. அநுதினமும் சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவை பின்பற்ற வேண்டும்.

7. ஆவியாலே நடத்தப்பட வேண்டும். *கலா 5:16 பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்படி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.*

ஆவிக்கேற்றபடி நடந்து கொள்வது என்றால், பரிசுத்த ஆவியானவரால் கற்பித்துதரப்பட்ட தேவனுடைய வார்த்தையின்படி நடந்து கொண்டு, நம்முடைய செயல்களை அவற்றுக்கேற்றபடி செய்து வாழுவது.

**ஆத்துமா, ஆவியின் ஆளுகைக்குட்பட்டே இருக்க வேண்டும். இதுவே மனிதனுக்கான தேவனுடைய திட்டம்.**

ஆத்துமா ஆவியின் ஆளுகைக்குட்பட்டு இருக்கும்போது, நம்மால் ஒரு இளைப்பாறுதலின் வாழ்வு வாழ முடியும். *மத் 11:29 நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.* உங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய நுகத்தை எடுத்துக்கொண்டு, அவருடைய சித்தத்தின்படி நடக்கும்போது, உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி நடந்து, ஒரு ஆவிக்குரிய விசுவாசியாக நம்மால் வாழ முடியும். இதுவே தேவனுடைய கட்டளை, விருப்பம்.

## <u>தேவனுடைய சத்தத்தை கேட்பது எப்படி.</u>

*யோவா 10:3 வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறான்.*
*4 அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது.*
*5 அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார்.*

இந்த வசனங்கள் மூலமாக இயேசு சில தெளிவான சத்தியங்களை நமக்கு சொல்லுகிறார்.

1. அவருடைய ஆடுகள் அவரது சத்தத்துக்கு செவி கொடுக்கிறது. செவி கொடுக்க முடியும், கொடுக்க வேண்டும் என்று அல்ல, "செவி கொடுக்கிறது"

2. அவர் தன் ஆடுகளை பேர் சொல்லி அழைக்கும்படியாக தனிப்பட்ட முறையில் தெரிந்து வைத்திருக்கிறார்.

3. ஆடுகள் அவரது சத்தத்தை அறிந்திருக்கிறது. மனதிலாக்கி இருக்கிறது.

இது இரட்சிப்பின் ஒரு மாபெரும் ஆசீர்வாதம். தேவன் நம்மோடு நேராக பேசுவது ஒரு மாபெரும் ஆசீர்வாதம். அவர் பேசுகிறார், இயேசு கிறிஸ்து இதை அப்படியே சொல்லி இருக்கிறார். இது ஒரு நெருங்கிய உறவை குறிக்கிறது. பல விசுவாசிகளுக்கும் தேவனுடைய சத்தத்தை கேட்பது மிகவும் கடினமாக இருக்கிறது. தேவனுடய சத்தத்தை கேட்டு நடக்கிற ஒரு விசுவாசியால், வாழ்க்கையின் எந்த சூழ்நிலையையும் வெற்றிகரமாக கடந்து செல்ல முடியும்.

எல்லா உண்மையான விசுவாசிகளும் தேவனுடைய சத்தத்தை கேட்கிறார்கள். ஆனால் பலராலும் அது தேவனுடைய சத்தம்தானா என்று அறிந்து கொள்ள முடியவதில்லை. இது நம் அறையில் இருக்கிற வானொலி, தொலைக்காட்சி அலைகளை போன்றது. அவைகள் எப்போதும் இருக்கின்றன. ஆனால் ஒரு வானொலிப்பெட்டி அல்லது ஒரு தொலைக்காட்சி பெட்டியை வைத்து அதை சரியான அலைவரிசைக்கு இயக்கும்போது அவைககளை காண, பார்க்க முடியும். இதற்கு பயிற்சியும் சமயமும் அவசியம்.

*சங் 46:10 நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்.*
*1இரா 19:12 பூமி அதிர்ச்சிக்குப்பின் அக்கினி உண்டாயிற்று; அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை; அக்கினிக்குப்பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று.*
தேவன் எப்போதும் நம்மோடு "மெல்லிய சத்தத்தில்" பேசுகிறார். அந்த சத்தம் இந்த "உலக சத்தத்தில்" அமிழ்ந்து போகிறது. அதனால்தான் நமக்கு கேட்க முடிவதில்லை.

**தேவன் பேசுவது ஆவியில் இருந்து ஆவியோடு.**
*யோவா 4:24 தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.*
புதிய ஏற்பாட்டு விசுவாசிகளோடு தேவன் பேசுவது அவர்களது ஆவியின் மூலமாக. தேவனுடைய ஆவி, அவர்களது ஆவிக்கு காரியங்களை தெரிவிக்கிறது. இது ஒரு அறிவு மாற்றம் போல நடக்கும். வார்த்தைகளால் அல்ல. இதை நம் மனது வார்த்தைகளாக நமக்கு தெரிவிக்கும்.
தேவன் நம்மோடு, நம் ஆவியில் வசிக்கிறார், அவர் ஒரு போதும் நம்மை விட்டு செல்வதில்லை. ***( எபி 13:5, யோசுவா 1:5, 1 நாளா 28:20, 1 கொரி 6;17, எபே 1:13, 2 கொரி 5:17-18, எபே 4:24, கலா 4:6 ).*** இது புதிய உடன்படிக்கையின் ஒரு மாபெரும் ஆசீர்வாதம் ( எரே 31:34 ). நித்திய ஜீவன் என்பது தேவனோடு உள்ள ஒரு நெருங்கிய உறவு ***( யோவான் 17:3 ).*** தேவனோடு பேசுவதும், அவர் பேசுவதை கேட்பதும் நிச்சயமாக இந்த நெருங்கிய உறவின் ஒரு பகுதியே.

*எபே 3:17 விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி,*
தேவன் பேசுவதை கேட்பதற்கான ஒரு முக்கிய காரியம், "கிறிஸ்து நம் இருதயத்தில் வாசமாயிருக்கிறார்" என்ற முழு நம்பிக்கை நமக்கு இருக்க வேண்டும். நம் வீட்டில் இருப்பது போல (at home) தேவன் உணர வேண்டும். ஆபிரகாமோடு தேவன் வாசமாயிருந்தார். அவரோடு பேசினார், சாப்பிட்டார், அவரது கேள்விகளுக்கு பொறுமையாக பதிலளித்தார். ஆனால் லோத்துவோடு தேவன் வாசமாயிருக்கவில்லை. தன் இரண்டு தூதர்களை மாத்திரம் அனுப்பினார் *( ஆதி 18 ).*

*சங் 37:4 கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்.*
நாம் தேவனை நாடி, அவரோடு மனமகிழ்ச்சியாயிருக்கும்போது, அவர் அவரது விருப்பங்கள், ஆவல்களை நம் இருதயத்தில் போடுகிறார். ஒரு கட்டத்தைல் தேவனுடைய விருப்பங்களே நம் விருப்பங்கள் என்று இருக்கு. அந்த வேண்டுதல்களை எல்லாம் அவர் அருளுவார். அப்படி பட்ட சமயத்தில் நம் இருதயத்தின் விருப்பங்களை நாம் தேவனுடைய விருப்பங்கள் என்று தீர்மானித்துக்கொள்ளலாம். இதற்கு முதிர்ச்சி அவசியம். தேவனுடைய வார்த்தையோடு ஒப்பிட்டு பார்த்தே இறுதி முடிவுகளை எடுக்க வேண்டும். மேலும் அப்படி தீர்மானங்கள் எடுக்கும்போது தேவனுடைய சமாதானம் அந்த சூழ்நிலையை ஆள வேண்டும். *கொலோ 3:15 தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது,.......*

தேவன் பேசுவதை கேட்டு, அல்லது தேவன் பேசுவதாக தீர்மானித்து முடிவுகள் எடுக்கும்போது கடைபிடிக்க வேண்டிய முக்கிய விதி " தேவன் என்ன சொன்னாலும் **"அது வேத வசனங்களுக்கு ஒத்ததாகவே இருக்கும்".** ***( சங் 138:2 ).***

**ஆமென்.**
**ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருங்கள்.**
**சகோ. வெர்ஜின் குமார்.**
If you need any clarifications kindly contact me in **deeveekumar@yahoo.com** Ph; 25572195, 99663557. Your comments are welcome.

**Resources;** Dakes bible commentary, Andrew Wommack bible commentary, Wuest's bible commentary, Vine's expository Dictionary of Bible words, Strong's Bible concordance, Vine's expository dictionary of the New Testament, The Spiritual man - By Watchman nee, Webster's Dictionary, All bible quotes referred from King James Version bible, unless quoted otherwise.

---------------------------------------